Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 259

சனிக்கிழமை 12 ஒகஸ்ட் 2023

ஆடி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## இராவணன் சிங்களவனாம்

சரத் வீரசேகரவின் புதிய உருட்டு

கொழும்பு, ஒக. 12
இராவண மன்னன் இயக்கர் குலத்தைச் சேர்ந்த சிங்கள வன். இராணவன் தமிழர் என்று குறிப்பிட்டுக் கொண்டு இனவாதத்தைத் தூண்டிவிட முயற்சிக்கிறார்கள். தமிழ்ப் பூர்வீகம் என்பது பொய் என்பதை எடுத்துரைக்கும் »11

தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில்

## விகாரை நிர்மாணம்: கிழக்கு ஆளுநர் தடை

திருகோணமலை, ஒகஸ்ட் 12
திருகோணமலை, இலுப்பைக்குளம் பொரலகந்த ராஜமகாவிகாரையின் கட்டுமானப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார். »11

## இத்தாலிக்கு அனுப்புவதாக 25 இலட்சம் ரூபா மோசடி

யாழ்., ஒக. 12
இளைஞனை இத்தாலிக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 25 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப் »11

## '13' உம் தமிழீழமும் ஒன்றே!

துவேசம் கிளப்புகிறார் ஜெனரல் ஜகத் டயஸ்

கொழும்பு, ஒக. 12
13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின் ஊடாக முழுமையான அதிகாரங்களை வழங்க முயற்சிப்பது மறைமுகமாக தமிழீழத்தை வழங்குவதற்குச் சமமானதாக இருக்கும் என்று »11

## ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மீண்டும் இணைப்பு

கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக. 12
ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்குமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.
இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட பணம் மாகாணசபைகளில் »11

தனியார் கல்வி நிறுவனத் தடை:

## நான் தோற்றால் சமூகமே தோற்கும்!

மாவட்டச் செயலர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஒக. 12
தனியார் கல்வி நிறுவனங்களை வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையில் நான் தோற்றுப்போனால் அது இந்தச் சமூகம் தோற்றதற்குச் சமமாகும் என்று யாழ். மாவட்டச் செயலர் »11

## புதைகுழியை மூடியது மாநகரசபை

யாழ்., ஒக. 12
கோம்பயன் மணல் மயானத்தில் சிசுக்களின்சடலங்களைப் புதைத்த குழிகள் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக முழுமையாக மூடப்பட்டுள்ளன.
வண்ணார்பண்ணையிலுள்ள வெற்றுக் காணியொன்றிலிருந்து சிசுவொன்றின் உடற் »11



வடக்குக் கடல் மார்க்கத்தில்

## போதைக் கடத்தலைத் தடுக்க ஆஸி. படைகளின் உதவி தேவை

வடக்கு ஆளுநர் நேரில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 12
வடக்கில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத போதைப்பொருள்கள் இங்கே கிடைக்கின்றது என்றால் எல்லைகளை மீறி வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றது. அதனைத்தடுக்க நடவடிக்கை எடுத்தும் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது.
அவற்றைக் கட்டுப்படுத்த அவுஸ்திரேலிய எல்லைப்படையின் உதவி தேவைப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தின் எல்லைப் பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத பயணங்கள், கடல் எல்லைகளில் நடைபெறும் சட்டவிரோத »11

## வேலைக்கு காத்திருப்போருக்காக மாபெரும் தொழிற்சந்தை யாழில்

யாழ். மாவட்டச் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 12
500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்வேறு நிறுவனங்கள் வேலை வாய்ப்பு தொழிற்சந்தையில் பங்கேற்கவுள்ளன என்று யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.
யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது: -
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து வேலைவாய்ப்பு தொழிற்சந்தையை »11

நல்லூர் பெருந்திருவிழா:

## 550 பொலிஸார் கடமையில் எஸ்.ரி.எப். உதவியும் பெறப்படும்

டி.ஐ.ஜி. மஞ்சுள செனரத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 12
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், திருவிழாக் காலத்தில் 550 »10

உயிர்மாய்க்க முயற்சித்த

## சிறுமியோடு சில்மிஷம் சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஒக. 12
ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் 25 வயதான இளைஞர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். »12

## அதிபருக்கு ஆதரவாக வீதியில் மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக. 12
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபருக்கு எதிராக அவதூறு பரப்பப்படுவதாகத் தெரிவித்து பாடசாலை மாணவர்கள் நேற்று மதியம் கே.கே.எஸ். வீதியில் பாடசாலைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்தப் போராட்டம் அதிபரால் தூண்டப்பட்டதாகத் தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம் ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், கடந்த 7ஆம் திகதி உயர்தர மாணவர்கள் சிலரை ஐந்து பாடவேளைகள் வெயிலில் வெளியே »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் குடியுரிமையை தமிழ்க் காங்கிரஸ் பறிக்கவில்லை!

## நாடாளுமன்றில் தெளிவுபடுத்தினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்!

கொழும்பு, ஓக. 12

**மலையக மக்களின் குடியுரிமையைப் பறிக்கக்கூடிய சட்டவரைவுகளை தமிழ்க் காங்கிரஸ் கட்சி எதிர்த்தே வாக்களித்தது. 85 வீதமான மலையக மக்கள் குடியுரிமையைப் பெறக் காரணமாக இருந்த சட்டவரைவையே எங்களின் கட்சி ஆதரித்தது. அது தவறு என்றால் மலையக மக்களிடம் மன்னிப்புக்கோரத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்கள் இலங்கைக்கு வந்த 200 ஆவது ஆண்டு நினைவைக் குறிக்கும் நடைபவனி ஒன்று தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை நடைபெறுகிறது. அதற்கான ஆதரவுப் பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்தபோது அதில் நானும் எமது அமைப்பினரும் பங்கு பற்றியிருந்தோம். அதில் கலந்து கொண்டிருந்த ஒரு பொதுமகன் என்னிடம் 'மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்துக்கு உங்கள் பாட்டனார் தலைமையில் உங்கள் கட்சி ஆதரவு வழங்கியமைக்காக இப்போதாவது மனிப்பு கேட்பீர்களா?' எனக் கேட்டிருந்தார். எனக்கு மிக மனவேதனையைத் தந்த அந்தக் கேள்விக்கான தெளிவுபடுத்தலை நான் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன். மலையக மக்களை இந்த நாட்டில் உரிமையற்றவர்களாக மாற்றிய சட்டத்தை எனது பாட்டனார் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் முற்றுமுழுதாக எதிர்த்தே வாக்களித்திருந்தது. அந்தச் சட்டத்தில் இரண்டு தலைமுறைகள் இலங்கையில் வாழ்ந்ததை சட்ட ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தினாலேயே இலங்கை பிரஜா உரிமை மலையக மக்களுக்கு வழங்கப்படும் எனச் சொல்லப்பட்டிருந்தது. அது அந்தக் காலப்பகுதியில் மலையக மக்களால் ஒருபோதும் செய்யப்படக் கூடியது அல்ல. அன்றைய சூழ்நிலையில் மட்டுமல்ல இன்றும் கூட அப்படியான ஆவண சமர்ப்பித்தல் எந்த வொரு நாட்டிலும் இல்லை. நவீன உலகில் இருக்கும் நடைமுறையான ஐந்து வருடங்கள் இந்த நாட்டில் இருந்தமைக்கான ஆதாரத்தை சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கைக் குடியுரிமையை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யுமாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகள் தமது தீர்வை முன்வைத்திருந்தன.

ஐந்து வருட கோரிக்கைக்கு இணங்க மறுத்த டி.எஸ்.சேனநாயக்க, தமிழ்க் கட்சிகள் மற்றும் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு ஆகியோரின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக, ஒரு குடும்பம் 7 வருடம் இலங்கையில் இருப்பதை உறுதிப்படுத்தினால் இலங்கைக் குடியுரிமையைப் பெறலாம் எனும் நிலைப்பாட்டுக்கு இணங்கிவந்தார். தனிநபருக்கு அந்தக் கால எல்லை 10 வருடம் எனவும் கூறப்பட்டு இந்திய - பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டங்களுக்கு ஒத்ததான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் ஏறத்தாழ 85 வீதமான மலையக மக்கள் இலங்கைக் குடியுரிமையைப்பெறக்கூடியவாய்ப்பை பெற்றுக்கொடுத்தது. 85 வீதமான மலையக மக்கள் குடியுரிமையை பெறக்கூடிய அந்தச் சட்டத்துக்கே அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆதரவளித்திருந்தது - என்றார்.

(ம-27-26)

## பெருந்தோட்டங்கள் காடாக்கப்படுகின்றன

### மீண்டும் அரசுடைமையாக்குங்கள் அநுரகுமார சபையில் சீற்றம்

கொழும்பு, ஓக. 12

பெருந்தோட்டங்களை கம்பனிகளே திட்டமிட்டு காடாக்குகின்றன. ஆகவே தோட்டங்கள் மீண்டும் அரசுடைமையாக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


ஏனைய சமூகங்களைக் காட்டிலும் பெருந்தோட்ட மக்கள் குறைந்த வருமானத்தையே பெறுகிறார்கள். நாட்டின் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் தோட்டக் கம்பனிகள் 1000 ரூபா வருமானத்தைக் கூட அவர்களுக்கு வழங்குவதில்லை. இதனால் பெருந்தோட்ட மக்கள் தமது அடிப்படைத்தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பெருந்தோட்ட மக்களுக்கு போதுமான சம்பளத்தை தோட்டக் கம்பனிகள் வழங்காவிட்டால் தோட்டங்களை அரசுடைமையாக்க வேண்டும். நாட்டு மக்களை அரசாங்கம் சமமாக நடத்துவதாக இருந்தால் நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். தோட்டங்களை கம்பனிகள் திட்டமிட்டு பலவீனப்படுத்துகின்றன.

பெருந்தோட்டப் பகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் இன்றும் லயன் அறைகளில் தான் வாழ்கிறார்கள். தற்போதைய நாகரிகத்திலும் இந்த நிலையே தொடர்கிறது. மலையக மக்கள் இன்றும் இந்த மண்ணுக்கு உரமாகுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த உரிமையும் இதுவரை வழங்கப்படவில்லை. மண்ணை நம்பி உழைத்தவர்களுக்கு ஏன் காணி உரிமை வழங்கக் கூடாது. முதலில் காணியை வழங்குங்கள் பிறகு வீடு கட்டுவது குறித்துப் பேசலாம். நாட்டில் ஏனைய மாகாணங்களில் உள்ள கல்வி முறைமையை காட்டிலும் குறைவான கல்வி வளங்களே பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படுகின்றன. அடிப்படை மற்றும் நடைமுறைக்குச் சாத்தியமான கல்விச் சேவை மலையகத்தில் இல்லை. வறுமையால் கல்வி கேள்விக்கிடமாகியுள்ளது - என்றார்.

(ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 04 . 1982

மறைவு 11 . 08 . 2023

### நாராயணசாமி கோவர்த்தனன்

(நாதஸ்வர வித்துவான்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணசாமி கோவர்த்தனன் நேற்று (11.08.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் மாரிமுத்து நாராயணசாமி மற்றும் ராஜேஸ்வரி தம்பதியரின் தவப்புதல்வனும், குமாரதாஸ் தங்கபாபு தம்பதியரின் அன்பு மருமகனும், பவப்பிரியாவின் அன்புக் கணவரும், தரணிகா, சசாங்கன், சாதுரியன் ஆகியோரின் அன்புத்தந்தையும், அமரர் பொன்னம்மா, அமரர் ராஜகோபாலன், அமரர் நடராஜா, யோகநாதன், சபாநாதன், ராஜலக்சுமி, ஞானசவுந்தரி, மனோன்மணி, சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், சங்கீதா, தீபா, நாகதீபன், கார்த்தீபன், மாதவன், மதுரன் ஆகியோரின் மைத்துனரும், யோகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், நித்தியசீலன், கிருபாகரன், ராகவர்த்தனி, சாரங்கி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
077 6258 839

தகவல்:
குடும்பத்தினர்.

(CS-25922) A-1

## ஊழியர்களின் சேமலாபம் வெகுவாகக் குறைவு

கொழும்பு, ஓக. 12

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களுக்கு அமைவாக, அரசாங்கம் மேற்கொண்டுவரும் கடன் மறுசீரமைப்புக் காரணமாக பெருந்தோட்டப் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களின் சேமலாப நிதி வெகுவாகக் குறைந்து வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரிஎல்ல சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரத் தேவையில்லை. ஆனால் அரசாங்கம் இதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து, அதற்கு வாக்கெடுப்பு நடத்தி, இறுதியாக இது தொடர்பாக எவராலும் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாத நிலையை ஏற்படுத்தவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க முடியும் என்றால் அதற்குரிய உறுப்புரை என்ன? முடியுமானால் காட்டுங்கள் - என்றார்.

(ம)

## இணைந்து நடவுங்கள்; திகாம்பரம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 12

தோட்ட மக்களின் உரிமைக்காக நுவரெலியாவில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள நடைபவனியில் மலையக மக்கள் அனைவரும் இணைந்து நடக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் உரிமைகளை வெல்வதற்கு அனைத்துத் தரப்பினரும் கட்சிபேதமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' தொடர்பில் ரணில் விலாங்கு விளையாட்டு

## ஐங்கரநேசன் கண்டனம்



**யாழ்ப்பாணம், ஓக. 12**

**ரணில் விக்கிரமசிங்க ஏற்கன[illegible] அரசியல் அமைப்பில் இருக்கும் '13'ஆவது திருத்தத்[illegible]னாதிபதியாக அவர் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கமுடியும். ஆனால் அவர் விலாங்கு மீன்போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைச் சட்டங்களில் உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்து விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்தவுள்ளார் என்ற தோற்றத்தைத் தனது நாடாளுமன்ற உரையின்போது வெளிப்படுத்தியிருக்கிறார். மாகாணசபைச் சட்டம் நடைமுறைக்கு வருவதோ, மாகாணசபைத் தேர்தல் நடைபெறப்போவதோ உடனடிச் சாத்தியம் இல்லாதவை. ரணில் விக்கிரமசிங்க, மாகாணசபைத் தேர்தலை நடத்துவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறிவிலித்தனம். மாகாணசபைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்து தமிழ்மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்வார் என்று நினைப்பது அதைவிட அறிவிலித்தனமானது. ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை விவகாரத்தைக் கையிலெடுத்திருப்பதன் முதலாவது நோக்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு கோரும் இந்தியாவின் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாகும்.

இரண்டாவது நோக்கம், ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் தான் ஜனாதிபதியாக நீடிப்பதை உறுதி செய்வதாகும். ரணில் தீர்வு தருவார் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி அவர்களின் வாக்குகளை அபகரிப்பதும், மாகாணசபை விவகாரத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுசென்று அதனை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலம் சிங்கள் மக்களினது வாக்குகளை வாரிச் சுருட்டுவதுமே அவரது இலக்குகளாகும். தமிழ்மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விலாங்குத் தனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

(ம-27)



நாட்டில் நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், அக்கராயன் கிராமத்தில் பொலிஸாரால் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. (ச-113)

## போலி ஆவணம் தயாரிப்பு: சட்டத்தரணி தகுதி நீக்கம்

கொழும்பு, ஓக. 12

போலியான ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவரை தகுதி நீக்கம் செய்து உயர்நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மத்திய மாகாண மேல் நீதிமன்றத்தின் பதிவாளர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த முறைப்பாட்டின் பிரகாரம் சட்டத்தரணிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இந்த சட்டத்தரணி, 1999ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி போலியான ஆவணம் தயாரித்ததன் மூலம் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டது. விசாரணையில் பிரதிவாதிக்கெதிராக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து சட்டத்தரணியின் பெயரை சட்டத்தரணிகள் பட்டியலில் இருந்து நீக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## மடுவுக்கு விசேட ரயில்

மடுத்திருத்தலத்தின் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 15ஆம் திகதி ஒப்புக்கொடுக்கப்படவுள்ள நிலையில், திருவிழாவை முன்னிட்டு சிறப்பு ரயில்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெருவிழா ஏற்பாட்டுக் கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

அதன்போது பெருவிழாவுக்குச் சுமார் 7 லட்சம் பக்தர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதே பெருந்தொகையான பக்தர்கள் மடுத்திருத்தலம் வந்து சுமார் 500க்கு மேற்பட்ட கூடாரங்கள் அமைத்து தங்கியிருந்து நவநாள் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. கொழும்பு - தலைமன்னார் ரயில்சேவை தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ளபோதும், மருதமடு பெருவிழாவுக்காக விசேட ரயில்சேவைகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து காலை 6.40 க்கு புறப்படும் புகையிரதம் அநுராதபுரத்துக்கு வருகைதந்து மடுவை மதியம் 12.20க்கு வந்தடையும். மீண்டும் அந்த ரயில் 12.50 க்கு திரும்பும். இந்த விசேட ரயில்சேவை எதிர்வரும் 15ஆம் திகதி வரை [illegible] வித்துள்ளது. [illegible]

## ஐஸ் போதையுடன் கொன்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஓக. 12

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, சந்தேகநபர் கொழும்பு கொடவத்தை போக்குவரத்து சமிக்ஞைக்கு அருகில் நின்றபோது கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




**என்னதான் ரணிலைப் பற்றி நரி, பரி எண்டு ஆயிரம் குற்றச்சாட்டுகள் இருந்தாலும் ரைமிங்கில தன்ர எதிர்த்தரப்பை நக்கலடிக்கிறதில ரணிலை மாதிரி ஒராளை இப்ப பாக்க ஏலாது. நெல்சன்ர படங்களில சீரியசான கட்டம் போகேக்க, திடீரெண்டு அந்த சீரியஸையே உடைக்கிறமாதிரி குபீரெண்டு சிரிக்கிற 'ஸீன்' வரும். ரணிலும் அப்பிடித்தான். தன்னைப் பற்றி ஆரும் கழுவி ஊத்தினால் சின்னச் சிரிப்போட அதைக் கேட்டுக் கொண்டிருந்திட்டு, இடையில ஒரு நக்கல் அடிப்பார். அந்த நக்கலைக் கேட்ட எதிராளி ஏனடா ரணிலை இப்பிடிக் கழுவி ஊத்தினன் எண்டு தலையைக் குனிய வேண்டியிருக்கும். அப்பிடி ஒரு அனுபவம் போன புதன்கிழமை விமலுக்கு வாய்ச்சிருக்கு.**

**ரணில் அண்டைக்கு பார்லிமெண்டுக்கு வந்திருந்ததைக் கண்டிட்டு, விமலின்ர வாய் சும்மா இருக்காமல், 'ரணில் தான் நினைச்சதெல்லாத்தையும் கண்மூடித்தனமாச் செய்துகொண்டிருக்கிறார். புதுச் சட்டமெல்லாம் போடுறார். எல்லாரும் எதிர்க்கிற பதின்மூண்டை தமிழருக்கு குடுக்கப்போறன் எண்டுறார். ஆனால் அதையெல்லாம் செய்ய அவருக்கு அதிகாரமில்லை. இலங்கை வரலாற்றிலேயே மக்கள் ஆணை இல்லாத [illegible]தலாவது ஜனாதிபதி ரணில் தான்' எண்டு வழக்கம் போல விமல் எட்டுக்கட்டைத்தொனியில கத்திக் கொண்டே போனார். அப்ப ரணில் வாயைத் திறந்து ஒண்டும் சொல்லாமல் தன்ர கைவிரலை 'இரண்டு' எண்டு காட்டுறமாதிரி மூண்டுதரம் உயர்த்திட்டு சிரிச்சுக் கொண்டிருந்திருக்கிறார். அப்பிடி ரணில் கையில ரண்டு விரலை மூண்டுதரம் ஏன் காட்டினவர் எண்டு விமலுக்கு விளங்கிட்டுது. அதால ஆள் பம்மிக் கொண்டு அப்பிடியே இருந்திட்டாராம்.**

**ரணிலின்ர ரண்டுவிரல் சிக்னலுக்கு என்ன அர்த்தமெண்டு உங்களுக்கு தெரியுமோ?**

**மக்கள் ஆணை இல்லாத முதலாவது ஜனாதிபதி ரணில் இல்லை. டி.பி. விஜயதுங்க தான் மக்கள் ஆணை இல்லாத முதல் ஜனாதிபதி. மக்கள் ஆணை இல்லாத ரண்டாவது ஜனாதிபதிதான் ரணில். 'இது கூடத் தெரியாதா விமல்?' எண்டதுதக்குத்தான் முதல் தரம் ரண்டு விரலையும் ரணில் தூக்கிக் காட்டி இருக்கிறார்.**

**விமலை விட அவரின்ர மனுசி சசி வீரவன்ஸவுக்கு வயது கூட. இது வெளியில தெரியவந்தால் வெக்கக்கேடு எண்டு நினைச்சு விமல் வீரவன்ஸ, தன்ர வயசைக் கூட்டிக் காட்டுற மாதிரி ஒரு கள்ள சேர்ட்டிபிக்கட் செய்தவர். அப்பிடி ரண்டு சேர்ட்டிபிக்கட் விமலிட்ட இருக்கெண்டது எனக்குத் தெரியும் எண்டதைக் காட்டத்தான் ரண்டாம்தரம் ரணில் ரண்டு விரலையும் உயர்த்திக் காட்டியிருக்கிறார்.**

**அதைமாதிரி விமலின்ர மனுசி சசிக்கு ரண்டு பாஸ்போட் இருக்கிற விசயம் வெளியில வந்து இன்னும் வழக்கு நடக்குது. அந்த வழக்கு இன்னும் நிலுவையிலதான் இருக்கு எண்டு விமலுக்குச் சொல்லி வாயை அடக்கத்தான் ரணில் மூண்டாம் தரமும் ரண்டுவிரலை உயர்த்திக் காட்டினவராம்.**

**எல்லாரின்ர வாயையும் அடக்கிற விமலை, இப்பிடி ஊமைக்குசும்பன் மாதிரி ரணில் அடக்கினதைத்தான் எல்லா எம்.பி. மாரும் இப்ப கதைச்சுச் சிரிக்கினமாம். என்னதான் இருந்தாலும் ஒரே கையில மூண்டு மாங்காய் விழுத்தின ரணில் ஒரு நக்கல் மன்னன் தான்.**



- பட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மௌனத் தீவு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 12
எழுத்தாளர் வே. பரிபுரபவனின் 'மௌனத் தீவு' நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் ப. புஸ்பரட்ணம், அவுஸ்திரேலிய விரிவுரையாளர் வை. ஈழலிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

வெளியீட்டுரையை ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய முகாமையாளரும், நூலின் நயப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி. மகேந்திரன் திருவரங்கன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ச-ரி3-66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 12
நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பு வயல் காணிகளின் வாய்க்கால் அபிவிருத்தி சம்பந்தமான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நுணாவில் மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயிகள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-ரி2)

# நிரந்தர கிராமஅலுவலரை நியமித்துத் தாருங்கள்!

### அக்கராயன் மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஓக. 12**
**கிளிநொச்சி அக்கராயன் கிராமஅலுவலர் பிரிவுக்கு, நிரந்தரக் கிராம அலுவலர் ஒருவரை நியமித்துத் தாருங்கள் என அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக இங்கு நிரந்தர கிராமஅலுவலரை நியமிக்கப்படாததால் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

இந்தப் பிரிவில் வசிக்கின்ற 700 வரையான குடும்பங்கள் நிரந்தரமான கிராமஅலுவலர் இல்லாமல் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக பயிர்ச்செய்கைக் காலங்களிலுள்ள தேவைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்களில் கிராம அலுவலரின்மையால் நெருக்கடிகளை எதிர்நோக்குகிறோம்.

எனவே கரைச்சிப் பிரதேச செயலாளர் அக்கராயனுக்கு நிரந்தரக் கிராமஅலுவலரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-ரி2-13)

## உக்குளான் வேட்டை; இருவர் கைது!



முல்லைத்தீவு, ஓக. 12
முல்லைத்தீவு-முள்ளியவளையில் காட்டு விலங்கான உக்குளான் எனப்படும் மிருகத்தை சட்டவிரோத துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடிய குற்றச்சாட்டில் இருவரை முள்ளியவளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முள்ளியவளை 3ஆம் வாட்டாரப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர்களிமிருந்து வேட்டையாடிக் கொல்லப்பட்ட மிருகம் மற்றும் சட்டவிரோத துப்பாக்கி என்பன மீட்கப்பட்டன. சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்களை முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)

## யாழ்ப்பாணத்தில் திருமந்திர மாநாடு

யாழ்ப்பாணம், ஓக.12
அகில இலங்கை சைவ மகாசபை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையுடன் இணைந்து திருமந்திர மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

இளையோருக்குத் திருமந்திரம் காட்டும் உன்னத சைவ இறையியல், மானிடவியல், மருத்துவம், அறநெறி ஒழுக்க சமத்துவச்சிந்தனைகளை எடுத்துச் செல்வதே இதன் பிரதான நோக்கமாகும். மாநாடு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் திருமூலரின் குருபூசை தினத்தில் நடத்தப்படவுள்ளது. (ச-66)

## வடக்கில் இன்றும் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
வடக்கு மாகாணத்தின் சில மாவட்டங்களில் இன்று சனிக்கிழமை, மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:
முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை பெய்யக்கூடும். சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம். கிழக்கு மற்றும் ஊவா, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும். இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்- என்றுள்ளது. (ச-ரி3)

# ஆடி அமாவாசை விரதம்: கீரிமலையில் ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 12
ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 15ஆம் திகதியன்று, கீரிமலையில் பிதிர்க்கடன்களை அடியவர்கள் நிறைவேற்ற சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் தலைமையில் ஆடி அமாவாசை உற்சவ சிறப்பு ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று விசேட கூட்டம் நகுலேஸ்வரம் சிவன் ஆலயத்தில் நடைபெற்றது.

இதன்போது இம்முறை பல ஆயிரம் பொதுமக்கள் எதிர்பார்க்கப்படும் நிலையில் அவற்றுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டன.

அதற்கமைய கீரிமலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கென 8 இடங்களில் வாகனத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருசக்கர வாகனங்களுக்குத் தனியாகவும் ஏனைய வாகனங்களுக்குத் தனியாகவும் வாகனத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கீரிமலை புனித தீர்த்தக் கேணி மற்றும் ஆலயச் சூழலுக்கு வரும் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கு பிரதான வீதிகளில் தற்காலிக வாகனத் தடைகள் ஏற்படுத்தப்படும். பொதுமக்களின் நன்மைகருதி போக்குவரத்து வசதிகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

வியாபார நிலையங்களில் கடமை புரியவோ யாசகங்களில் ஈடுபடவோ சிறுவர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். தற்கால வெப்பக் காலநிலைக்கமைய பல இடங்களில் குடிதண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு சுத்தமான குடிதண்ணீர் விநியோகிக்கப்படும். பொதுமக்களுக்குத் தேவையான சுகாதார சேவைகளை வழங்குவதற்குரிய போதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேட பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுவார்கள். தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு வலி. வடக்கு பிரதேசசபையினரிடம் உரிய வியாபார அனுமதி பெறப்படல் வேண்டும்.

தாகசாந்தி நிலையங்களை அமைப்பதற்குரிய முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று துறைசார் அதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டது. (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற் பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீட்டில் குடும்பத்தினருடன் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரரால் சங்கடங்கள் உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கிய மான முடிவு எடுக்க உகந்த நாள். உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இரந்து பெறுபவையல்ல அறப்பணிகள்

'எமது நிலம்: எமது மக்கள்' என்ற எண்ணப்பாட்டில் தனியார் நிறுவனங்கள் அறப்பணிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்று தன் உளக்கிடக்கையை – எண்ணப் பாட்டை – வெளிப்படுத்தியிருக்கின்றார் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில், சிறுவர் விழிப்புணர்வுப் பதாகைகளைக்கூடத் தயாரிப்பதற்கு எந்தவொரு நிறுவனமும் முன்வராத நிலையிலேயே இந்தச் சலிப்பு மனோநிலை மாவட்டச் செயலரிடமிருந்து பீறிட்டிருக்கின்றது.

ஒரு சமூகம் கல்வியிலும் கலைகளிலும் கலாசாரத்திலும் நேரானதும் சீரானதுமான பாதையில் பயணப்பட வேண்டுமாயின், தனியார் நிறுவனங்களினதும் தொண்டு நிறுவனங்களினதும் வகிபங்கு அங்கு தவிர்க்க முடியாததும் அவசியமானதுமாகும். இப்போதுள்ள பொருளாதாரச் சூழமைவில் வெறுமனே அரச திணைக்களங்களாலும் அரச நிறுவனங்களாலும் மட்டும் அறப்பணிகளை – சமூக நலன்சார் செயற்றிட்டங்களை மேற்கொள்ள முடியாது. நிதி ஒதுக்கீடு, ஆளணி போன்ற ஏகப்பட்ட சவால்களை இந்தப் பணிகளின்போது சந்திக்க வேண்டியிருக்கும். ஆதலால்தான், அரச நிறுவனங்களின் இயலுமைக்கு அப்பாற்பட்ட வகிபங்கு இதுவிடயத்தில் எதிர்பார்க்கப்படுகின்றதுடன், அது தவிர்க்கப்பட முடியாததாகவும் மாறியிருக்கின்றது.

இது இவ்வாறிருக்கையில், மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போர்தின்ற பூமி மீண்டெழ வேண்டுமாயின், அது தொண்டு நிறுவனங்களினதும், நிதி நிறுவனங்களினதும், வணிக வல்லாதிக்க ஸ்தாபனங்களினதும் வகிபங்கு இல்லாமல் அறவே சாத்தியமில்லை. ஆனால், மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டியதைப்போன்று – குற்றஞ்சாட்டியதைப்போன்று – அறப்பணிகளுக்கும், தாயகத்தில் நிலைபெற்றிருக்கும் ஏராளமான தனியார் நிறுவனங்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் கொஞ்சம்கூட தொடர்பில்லா நிலையே காணப்படுகின்றது.

முன்னைய காலங்களில் பல தனியார் நிறுவனங்கள் தன்னியல்பாகவே அறப்பணிகளில், சமூகக் கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. சூழலையும், சமூகத்தையும் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மில்க்வைற் அதிபர் அமரர் கனகராசா இதில் குறிப்பிடத்தக்கவர். ஆனால் இப்போது அப்படியல்ல, எல்லாமே மாறிவிட்டது. இரை வலுவிழக்கும் வரையில் காத்திருந்து கொன்றுண்ணும் பிணம்தின்னிக் கழுகுகளைப் போன்றுதான் இங்குள்ள பல நிதி நிறுவனங்களினதும், தனியார் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. போரால் உடல் அவயங்களை இழந்து, வாழ்வை இழந்து, வாழ்க்கைக்கான நிதி மூலங்களை இழந்து, 'அந்தர வழியில் அகப்பட்ட வானகன்' போன்று திக்கறியாமல் திசையறியாமல் அல்லாடிக்கொண்டிருக்கும் ஏகப்பட்ட குடும்பங்கள் இந்தத் தனியார் நிறுவனங்களாலும் நிதி நிறுவனங்களாலும் இலக்கு வைக்கப்பட்டு இரையாக்கப்பட்டுள்ளன என்பதே உண்மை. போரால் தப்பித்து நிதி நிறுவனங்களிடம் அகப்பட்டு, இனியும் இயலாது என்ற கட்டத்தில் உயிரை மாய்த்தவர்கள் தாயகத்தில் பலர். இதை விடவும் அபத்தமான ஒன்றாக உலகில் வேறு என்னதான் இருந்துவிடும்?. இத்தகைய வர்த்தகப் பெருச்சாளிகளிடம் அறப்பணியையும், அன்பையும் எதிர்பார்ப்பது மடமைத்தனம்தான்.

அறப்பணிகளும், சமூகச் செயற்றிட்டங்களும் இரந்து பெறும் விடயங்கள் அல்ல. நிதி நிறுவனங்களும் வர்த்தகப் பெரு நிறுவனங்களும் அறப்பணிகளில் ஈடுபட வேண்டும் என்பது சட்டமாக்கப்பட வேண்டும். இதய சுத்தியுடன் அறப்பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு விசேட வரிச்சலுகைகள் வழங்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் சட்டங்கள் மூலமாகவேனும் இந்தக் கலாசாரத்தை – மேற்கத்தேயப் பொருளாதாரப் பண்புகளை இலங்கைக்குள் வளர்த்தெடுக்க அரசாங்கம் முனைய வேண்டும். ஆனால், வர்த்தக நிறுவனங்களுக்காகவும் தனியார் மயமாக்கலுக்காகவும் சுழன்று இயங்கிக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்திடம் இவ்வாறான குணாம்சங்களை எவ்வாறு எதிர்பார்ப்பது?

### நாளொரு நல்வார்த்தை

"நமக்கு இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீண் போகாது"

– அறிஞர் அண்ணா




கதிரியக்கத்துறை

# நிபுணர்கள் இல்லை: சேவைகள் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 12

கதிரியக்கத் தொழில்நுட்ப நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக அடுத்த சில மாதங்களில் அரச மருத்துவமனைகளில் சிடி ஸ்கான் உள்ளிட்ட துறைசார் சேவைகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்படும் என கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



இதுதொடர்பில் அதன் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்ததாவது:

கதிர்வீச்சு தொழில்நுட்ப நிபுணர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சுமார் 40 வீதமான பற்றாக்குறை இந்தப் பிரிவுகளில் நிலவுகின்றது. எஹலியகொட மருத்துவமனையில் கதிரியக்க சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. கதிர்வீச்சு தொழில்நுட்ப நிபுணர்கள் வெளிநாடுகளுக்கு வெளியேறுகின்றமையால் அந்த வெற்றிடங்கள் வறிதாகிவிட்டன. பல மாதங்களாக சுகாதார அமைச்சுக்கு இதுதொடர்பில் தெரிவித்த போதும் சுகாதார அமைச்சு ஆட்சேர்ப்பை தாமதப்படுத்துகிறது. அதன் காரணமாக இந்தச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில், அரசு மருத்துவமனைகளில் இந்தச் சேவை அலகுகள் வீழ்ச்சியடையலாம் - என்றார். (ச-இ)

## எச்.ஐ.வி. தொற்றுக்கு புதுமுறை சிகிச்சை!

கொழும்பு, ஓக. 12

எச்.ஐ.வி. தொற்றாளர்களுக்காக 'ப்ரெப்' என்ற புதிய சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு கிளினிக்குகளில் இந்தச் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அதன் பணிப்பாளர் மருத்துவர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டை விட எச்.ஐ.வி. தொற்று இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 165 புதிய நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளன. இந்த நோய்த்தொற்றுகளில் பெரும்பாலானவை ஆண்களுக்கே கண்டறியப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## 'அஸ்வெசும' பரிசீலனை மாத இறுதியில் நிறைவு

கொழும்பு, ஓக. 12

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்கான ஆட்சேபனைகள் மீதான பரிசீலனைகள் இந்த மாதம் நிறைவடையும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகளை வழங்குவதே 'அஸ்வெசும' திட்டத்தின் நோக்கம். பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாதாந்தம் 5.2 பில்லியன் ரூபா பணம் செலவிடப்படுகிறது. 'அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்ட உதவிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தற்போது பிரதேச செயலாளர்களின் தலைமையில் பரிசீலனை செய்யப்படுகிறது. இந்தப் பணிகளை இந்த மாதத்தில் முடிவுறுத்தி 2024ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணியை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

### நாளை

13.08.2023 ஞாயிற்றுக்கிழமை

ஆடி 28

சுபநேரம் : 09.05 - 10.35

ராகுகாலம் : 04.35 - 06.05

பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா இனத்தவர்கள், வெளிநாடு, உள்நாடு அரச உத்தியோகம் / உத்தியோகம் இல்லாதது

சூரியன் / செவ்வாய் குறிப்புகள் தாராளம் உண்டு. எம்மிடம் தொடர்புகொள்ளவும். விரைவாக பொருத்தம் பார்த்து தரப்படும்.

தொடர்பு: வி.ஜெயந்தி

**077 973 3183**

(CS 22673) 1-6


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **கனிஸ்ரன் அகல்ஜா** அவர்களின் அன்புத் தாயார்

### இராசு சுபாசினி

நேற்று (2023.08.11) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை,**

N.1

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து) கைதடி

## வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

மேற்படி எமது சங்கத்தின் கிளைக்குழு தேர்தல் நடைபெற உள்ளதால் 30.06.2023 உடன் முடிவுறுத்திய வாக்காளர் பட்டியல் தலைமைக் காரியாலயத்தின் விளம்பரப்பகுதியில் 26.08.2023 வரை பார்வையிடுவதற்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**12.08.2023**

(cr.40400) N.1

## அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்


மேற்படி எமது சங்கத்தின் **விசேட பொதுக்கூட்டம் 26.08.2023 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30** மணிக்கு **சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில்** நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சங்கத்தின் அங்கத்தவர் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இக் கூட்டத் திற்கு கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் சங்கத்தின் செயற்பாடுகளை கொண்டு நடத்துவதற்கு நிர்வாக குழு ஒன்றை தெரிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

(cs.51612) (N.1)

**செயலாளர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 • 06 • 1943



விண்ணில் 12 • 08 • 2022

### பொன்னையா தேவராஜா

(எலக்ரீசியன் - முன்னாள் ஒப்பரேற்றர்
வசந்தி சினிமா - வவுனியா)

**திதி: அபரபக்ஷ பிரதமை (02.08.2023)**

கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப் போனாலும்
மீளாத் துயரில் உம் நினைவுகளுடன்
வழிகளும் ஏதும் உண்டோ
வையகம் மீண்டும் காண

**பொ.மாதவராஜா (சகோதரன்)**
**அண்ணாவி வளவு,**
**கே.கே.எஸ். வீதி,**
**சுன்னாகம்.**
**021 224 2046**

**நீங்கா நினைவுடன்**
**மனைவி,**
**மகள்மார், மருமக்கள்,**
**பேரன்கள், பேர்த்தி,**
**சகோதரர்கள்.**

# INVITATION FOR BID (2023/10)
# Regional Directorate of Health Service Jaffna

01. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

02. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

***"Bidding will be conducted through National Competitive Bidding in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.***

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

04. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents

05. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.

07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, no 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 am at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

08. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.

09. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | | | From 14.08.2023 until 25.08.2023 | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | | At 2.30 P.M on 21.08.2023 | |
| | Closing and Opening of Bids | | | | | At 10.30 A.M on 28.08.2023 | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
| NP/04/41/2023/Unicef/W/06 | Renovation of MOH Building at Velanai | 0.76 | 63 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/18 | Renovation of Patient waiting area at Central Clinic MOH Point perdo. | 1.74 | 77Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,500.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/19 | Renovation PHC Building at Thumpalai and Katkovalam | 1.55 | 75 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/20 | Renovation of PHC Building at Thondamanaru | 1.27 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/21 | Renovation of Patient waiting at PHC Polykandy East. | 0.86 | 66 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,600.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/22 | Renovation of Patient waiting area at PHC Imayanan | 1.31 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,500.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/23 | Renovation of Patient waiting area at PHC Uduppiddy | 1.4 | 74 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 14,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/24 | Improvement works of Building at MOH Karaveddy. | 1.60 | 76 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/25 | Renovation of PHC Building at Aththiyady and Kaddaivelly | 0.94 | 69 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/26 | Renovation of PHC Building at Suthanthirapuram Vayavilan | 1.49 | 75 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/27 | Renovation of PHC Building at Kuppilan and Kuddiyappulam | 1.18 | 72 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 12,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/28 | Renovation of PHC Building at Kulamankkal | 0.99 | 70 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/29 | Renovation of PHC Building at Naguleswaram | 0.60 | 59Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/30 | Renovation of Building at MOH Nallur and PMCU Kokkuvil | 0.35 | 52 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 4,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/32 | Renovation of PHC Building at Ariyalai Navalady | 0.18 | 21Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 2,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/W/33 | Repair and Renovation of PHC Building at Neervelly Kopay | 1.10 | 71 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 12,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/05 | Renovation of Building (Plumbing) at PHC Ponnalai and MOH Changanai. | 0.69 | 62 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/06 | Plumbing and Sanitary work at PHC Neervelly Kopay | 0.27 | 31 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/07 | Water Supply & Sanitary work at PHC Allaippiddy and Saravanai. | 0.16 | 18 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 2,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/08 | Water Supply & Sanitary work at PHC Kuppilan and Sanguvelly | 0.35 | 40 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 4,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/09 | Water Supply & Sanitary work at PHC Kokkuvil and Ariyalai | 0.53 | 57 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/10 | Plumbing and Sanitary Work PHC Neervelly Kopay. | 0.28 | 32 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/11 | Water Supply & Sanitary work at PHC Thondamanaru and Viyapaarimulai | 1.08 | 71 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 11,000.00 | Till 13.11.2023 |
| NP/04/41/2023/Unicef/SW/12 | Water Supply & Sanitary work at PHC Thumpalai and MOH Point Pedro | 0.75 | 63 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,000.00 | Till 13.11.2023 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service,
Jaffna.

(CR/ 40402 )AH-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 14 . 09 . 1936



ஆண்டவன் அடியில் 08 . 08 . 2023

### திருமதி துரைசிங்கம் அன்னரத்தினம் (அன்னம்)

(மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்)

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் அன்னரத்தினம் கடந்த (08.08.2023) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா சௌந்தரம் தம்பதியரின் பாசமிகு மகளும், யோகரத்தினம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், நாகரத்தினம் (அமரர்), தங்கரத்தினம் (அமரர்), கனகசபை (அமரர்), சிங்கரத்தினம் (அமரர்), சுகிர்தரத்தினம் (அமரர்), இராஜரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விமலராஜ், ரவிராஜ், பத்மராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பராணி, சசீலா, கிரிஜா ஆகியோரின் மாமியாரும், விபிஜன், விபித்திரா, விபூஷா, நிதூசன், விபு, பிருதுவி, கம்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 221 3225
076 2574 941 (விமல்)
076 5692 395 (ரவி)
077 5488 934 (பத்மன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25912) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு • 25 • 07 • 1972



இறப்பு • 11 • 08 • 2023

### இராசு சுபாசினி

கோணப்புலம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசு சுபாசினி நேற்று (11.08.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசபிள்ளை, கணேஸ்வரியின் அன்பு மகளும், குணசிங்கம் இராசுவின் பாசமிகு மனைவியும், அகல்யா, விதுஜா, சயீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான குலேந்திரகுமார், ஜெயந்தினி மற்றும் சுகந்தினி, சிவகௌரி, ரமேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கனிஸ்ரனின் பாசமிகு மாமியாரும், நிலக்ஷினி, பவீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குலபதி, வாசுகி, நாகேஸ்வரன், ஜெயவதனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
076 602 5463


(cs 25906) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15.07.1967

### சுந்தரலிங்கம் தங்கேஸ்வரன்

மறைவு 08.08.2023



ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் சுவிசை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் தங்கேஸ்வரன் அவர்கள் கடந்த (08.08.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் சந்திராதேவி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுமதியின் (சுவிஸ்) பாசமிகு கணவரும், தனுசன் (சுவிஸ்), சுதர்சன் (சுவிஸ்), சாருசன் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாநிதி (பிரான்ஸ்), சிவநிதி (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் சகோதரனும், சுஜிதரன் (பிரான்ஸ்), சுதாகரன் (கனடா), சுதாரணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சிவநாதன் சித்திராதேவியின் பெறா மகனும், மகாதேவன் சற்குணதேவியின் மருமகனும், மனோஜெயந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜங்கரன் (கனடா), சிவனேஷன் (நோர்வே), மனோரஞ்சன் (ஜேர்மனி), சிவசோதி (பிரான்ஸ்), சர்மிளா, மஞ்சுளா, ஜனனி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், மதி (நோர்வே), உமா (நோர்வே), தங்கம் (சுவிஸ்), ஜெசிந்தா (பிரான்ஸ்), சாமினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், குணசிங்கம் (நோர்வே), திலகன் (நோர்வே), குமார் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும், கிஷாந் (பிரான்ஸ்), கிருஷ்ணி (பிரான்ஸ்), கிதுஷன் (பிரான்ஸ்), அபிஷன் (கனடா) ஆகியோரின் மாமாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
076 755 5008

(CS 25787) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிக் கிண்ணம் - 2023 கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

'உதயன்' ஊடக நிறுவனம் மற்றும் லவ்லி ஐஸ்கிறீம் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையோடு லீக் முறையிலான 'தென்மராட்சிக் கிண்ணம்-2023' எனும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு தென்மராட்சியில் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விருந்தினர்களாக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன், லவ்லி ஐஸ்கிறீம் நிறுவன உரிமையாளரும் சமூகசேவகருமான கலாநிதி முத்துக்குமாரசாமி, நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சு.சிவானந்தன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

என்.என்.ரி.பி.எல்., ரி.எம்.பி.எல்., ரி.பி.பி.எல். கிரிக்கெட் தொடர் தலைவர்கள், தென்மராட்சியின் சமூக சேவையாளர்கள், தென்மராட்சி கிரிக்கெட் ஆர்வலர்கள், புலம்பெயர் கிரிக்கெட் ஆர்வலர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். பத்து ஓவர்கள் கொண்ட இந்தத் தொடரில் 10 அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தட்டுப்பாடான மருந்துகள் இறக்குமதி

பற்றாக்குறை நிலவிய 14 வகையான மருந்துகளை நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் நிலவிய மருந்து பற்றாக்குறை 242 ஆகக் குறைவடைந்துள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியக் கடனுதவித் திட்டத்தினூடாக நூற்றுக்கும் அதிகமான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த மாதத்துக்குள் இந்த மருந்துகள் நாட்டுக்கு கிடைக்குமென எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)

## ஸ்கந்தவரோதயன்களின் சங்கமம் இன்று

யாழ்., ஓக. 12 சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர்களின் ஸ்கந்தவரோதயன்களின் சங்கமம் இன்று பி.ப. 4.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-இ)


## கேள்வி அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் 2023

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.
03. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
06. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் 12.08.2023 ஆம் திகதியிலிருந்து 24.08.2023 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
07. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அலுவலக நாட்களில் 12.08.2023 ஆம் திகதியிலிருந்து 24.08.2023 ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (VAT நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
08. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 25.08.2023 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 18.08.2023 ஆம் திகதியன்று பிற்பகல் 14.30 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/45(3)/PL/PSDG/W/04/2023 | Balance work for construction of dumping ground access road at araththinagar in Pallai | 3.04 Mn | 60 நாட்கள் | C9, C8 and C7 | 31,000.00 | 24.11.2023 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,பளை.
12.08.2023

(cr) (N-1)


## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

கிளிநொச்சி, கனகபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று செயலர் அ.றெஜி அலோசியஸ் அறிவித்துள்ளார். இந்தப் பொதுக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-இ)


### காணி விற்பனைக்கு

பளை நகரில் புலோப்பளையில்
உள்ள காணியொன்றும்
வயல்காணியும்
விற்பனைக்குண்டு.
077 932 5343

(CS 16083) A-1

### கடையுடன் காணி விற்பனைக்கு

No.241, Stanley Road,
யாழ்ப்பாணத்தில் அரைப் பரப்புக்
காணி கடையுடன் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவை இல்லை)
தொடர்பு: 071 534 6640
077 645 2487

### உடனடி வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் CIDA தரம் C4 முன்னணி கட்டுமான நிறுவனத்திற்கு **தொழில்நுட்ப உத்தியோகத்தர்** தேவை.

* இடம் : யாழ்ப்பாணம், மல்லாவி
* கல்வித் தகைமை : **HNDE (Civil), NCT (Civil/QS)**, அல்லது சமமானது.
* கட்டடத் துறையில் 3 வருட அனுபவம்.
* குறைந்தபட்ச மேற்பார்வையுடன் பணிபுரியும் திறன்.
* வயது : 35இற்கு கீழ்.

**நேர்முகத் தேர்வு:**
**காலம் : 14.08.2023**
**நேரம் : 9.30 am**
**இடம் : இல.9, நந்தாவில் ஒழுங்கை, தாவடி, யாழ்ப்பாணம்.**
உரிய சான்றிதழ்களுடன் வரவும்.
**தொடர்பு:**
**0777 120 945, 021 221 3663**

(CS 25907) A-1

## ஸ்ரீவெங்கடேஸ்வரா திருமண சேவை

CANADA, U.K, SWIS, FRANCE - U.S.A.
மேற் கண்ட நாடுகளோடு திருமணசேவையை நடத்துகிறோம். படித்த மணமக்கள் மேலும் Divorce ஆனவர்களும் எம்மிடம் உண்டு. வயது 28 இற்கு மேல் திருமணமாகாதவர்கள் ஜாதகத்தோடு வரவும் உங்களுக்கு திருமணம் நிச்சயம்.

ராம் அலைக்ஷாண்டர்
Mannar, Jaffna.
Whatsapp 076 051 6514
076 401 7529
076 609 8487
CANADA
6473 894130

(cs.51616) (N.1)

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

கடந்த (25.07.2022) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் திரு.ஐயாத்துரை துரைசிங்கம்



அவர்களின் முதலாம் ஆண்டு திவசக்கிரியை இன்று (12.08.2023) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] உடுவில்.
077 3172 015.

(CS 25920) A-1

மனைவி-சுபத்திரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

1. Graphic Designer (கிராப்பிக் டிசைனர்)
2. Marketing Staff
(சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்)




மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் இன்று (12.08.2023) சனிக்கிழமை மற்றும் (14.08.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

**உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# சேவை நலன் பாராட்டு



யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில்
2012 முதல் அதிபராக பணியாற்றி ஓய்வுபெறும் வணக்கத்திற்குரிய

## ப.சிவலோகநாததேசிகர்

(இலங்கை அதிபர் சேவை தரம் 1, அகில இலங்கை சமாதான நீதவான்)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரம்**

- முதல் நியமனம் ஆசிரியராக – 10.10.1990 – 20.09.2011 வரை
  யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை
- யா/ வட்டு. மத்திய கல்லூரி (ஆசிரியர்– தரம் 2,1) – 21.09.2011 – 04.10.2012 வரை
- யா/ வட்டு. மத்திய கல்லூரி (ஆசிரியர்) – 05.10.2012 – 22.11.2012 வரை
  (இலங்கை அதிபர் சேவை தரம் – 2)
- யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை – 23.11.2012 – 12.08.2023 வரை
  (அதிபர் – இலங்கை அதிபர் சேவை தரம்– 1)
- சங்கானை கோட்டை அதிபர் சங்கத் தலைவர் 2014 முதல்
- அகில இலங்கை சமாதான நீதவான் 31.03.2000 முதல்
- சைவக் குருவாக குருப்பட்டம் பெற்றமை 28.11.2003 முதல்

*அதிபர் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்*

வாழ்த்துவோர்: ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள்.

**யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை**

(cs.25905) (N-1)

# மரண அறிவித்தல்

## கனகசபை பாலராசா (பாலன்)



மண்டைதீவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலராசா (பாலன்) நேற்று (11.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 25.12.1961 — மறைவு 11.08.2023

தகவல்:
மகன் - பா.சாரங்கன்
077 2466 671

# மரண அறிவித்தல்

தோற்றம் 16.09.1949 — மறைவு 09.08.2023



## திருமதி மைதிலி இராசநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

மயிலிட்டி வடக்கு நக்கட்டி ஓடையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மைதிலி இராசநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர், யா/மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்) அவர்கள் கடந்த (09.08.2023) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலங்கநாயகம் மகேஸ்வரி தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், பவானி (UK), காலஞ்சென்ற Dr. பத்மினி, கேமாங்கினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்நாயகி, குலநாயகி, சிறீதரன், மல்லிகாதேவி, சத்தியநாயகி, கொங்காதரன், Dr.பூபாலசிங்கம், கிருஷ்ணராஜா, நித்தியானந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக இன்று (12.08.2023) சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8.30 - மாலை 5.00 வரை வைக்கப்பட்டு நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் ஈமக்கிரியைகள் இடம்பெற்று, மதியம் 12.30 மணிக்கு கல்கிசை பொது மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திரு.பூ.இராசநாயகம் (கணவர்) 077 9764 361**
**திருமதி தி. கேமாங்கினி (சகோதரி) 077 4884 885**

# மரண அறிவித்தல்

தோற்றம் 20.08.1936 — மறைவு 11.08.2023



## திருமதி பரமலிங்கம் பங்கசாம்பாள் (பகவதி)

நயினாதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 160, இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமலிங்கம் பங்கசாம்பாள் (பகவதி) நேற்று (11.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகநாதபிள்ளை பரமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உதயகுமார் (உதயா செரமிக்ஸ்) மற்றும் நந்தகுமார் (கனடா), அருள்மொழி (மட்டக்களப்பு), அன்புமொழி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலை), தேன்மொழி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வத்சலா (உதயா செரமிக்ஸ்), ருக்மினி (கனடா), காலஞ்சென்ற Dr. தட்சணாமூர்த்தி மற்றும் சத்தியபாலன் (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.160. சேர் பொன். இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
**021 222 7431, 077 197 4422**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீண்டும் பெற முயல்கின்றதா இந்தியா?

கச்சதீவை காங்கிரஸே இலங்கையிடம் ஒப்படைத்தது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருப்பதன் ஊடாக, அதனை மீளப்பெறுவதற்கு இந்தியா முயல்கின்றதா என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தியப் பிரதமர்கள் எவரும் இதுவரையில் இவ்வாறானதொரு கருத்தை முன்வைக்காத நிலையில் பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்திருப்பது தமது சந்தேகத்தை வலுப்படுத்துவதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

'கச்சதீவை மீண்டும் இந்தியா பெற்றுக்கொள்ள வேண்டும் என தமிழக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், இந்தியாவைப் பிரிக்கும் பணியை காங்கிரஸ்தான் செய்தது. 1974ஆம் ஆண்டு, இந்திய - இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின் கீழ், அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்திதான், கச்சதீவை இலங்கைக்கு வழங்கினார். இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள கச்சதீவு இந்திய - இலங்கை மீனவர்களாலும் சமமாகப் பயன்படுத்தப்பட்டது. காங்கிரஸ் தனது அரசியல் தேவைக்காக இந்திய மக்களை மூன்றாகப் பிரிக்கிறது' என்று மோடி குறிப்பிட்டார்.

பிரதமர் மோடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதா கூட்டணியால் நேற்று தோற்கடிக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (அ-ஒ,இ)

## பாதிக்கப்பட்ட சகலருக்கும் குடிதண்ணீர் விநியோகம்

### இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் வறட்சியான அனைவருக்கும் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

'யாழ். மாவட்டத்தில் நெடுந்தீவில் ஆயிரத்து 38, சாவகச்சேரியில் ஆயிரத்து 553, மருதங்கேணியில் 956, சங்கானையில் 3 ஆயிரத்து 507, ஊர்காவற்றுறையில் 568 என 7 ஆயிரத்து 622 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் தேவை என்று பிரதேச செயலர்கள் ஊடாக அறிக்கையிடப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவின் கோரிக்கை அண்மையிலேயே கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் அந்தப் பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும்' - என்றார். (அ-ஒ,125)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

கொக்குவில் கோணாவளை வைரவர் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பொதுக்கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களை சமுகமளிக்குமாறு கோணாவளை வைரவர் சுவாமி பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ம-66)

## திருவள்ளுவர் தின விழா

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் ஏற்பாட்டில் திருவள்ளுவர்தின விழாவும் 2023ஆம் ஆண்டுக்கான கல்விச் சகாய நிதி வழங்கல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கோண்டாவில் கிழக்கில் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் சின்னராசா கர்ணன் கருத்துரை ஆற்றவுள்ளார். மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ம-66)

### முஸ்லிம் பகுதிகளில்

## புலிகளுக்கு எதிரான சுவரொட்டிகள்

அம்பாறை, ஓக. 12

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சுவரொட்டிகள் முஸ்லிம்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்று ஒட்டப்பட்டுள்ளன.

'1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏறாவூர் மற்றும் காத்தான்குடியில் விடுதலைப் புலிகளால் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட எமது நண்பர்களையும் உறவினர்களையும் நினைவு கூருகின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை புலிகளுக்கு ஆதரவான அனைத்து நியாயங்களையும் கண்டிக்கவேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளில் நியாயப்படுத்துவதற்கு கனேடிய அரசாங்கம் வெட்கப்பட வேண்டும்' என்று அந்த அநாமதேய சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

### 550 பொலிஸார்...

பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தேவைப்படின் விசேட அதிரடிப் படையினரின் (எஸ்.ரி.எப்.) உதவியும் பெறப்படும். மேலும் திருட்டுக்களைத் தடுப்பதற்காக சிவில் உடையிலும் பொலிஸார் களமிறக்கப்படுவர் என யாழ். மாவட்ட மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி.) மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

இதேவேளை - நல்லூர்த் திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் ஒன்று யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி காலையிலிருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு செப்ரெம்பர் 16ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும். ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகரசபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வேறு வாகனங்கள் உட்செல்லமுடியாது. அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி காணொலிப் பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்துக்குள் பிரவேசிக்கமுடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகரசபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியும். ஆனால், இரதோற்சவம் மற்றும் சப்பறத் திருவிழாக்களின்போது கச்சேரி, நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும். பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளதுடன் சுமார் 50 கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படவுள்ளன என்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ஒ,20,26,27)

### மார்ட்டீன் வீதி கொலை வழக்கு

## தூக்குத்தண்டனை நீதிமன்றால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதி கொலை வழக்கில் எதிரிக்கு விதிக்கப்பட்டிருந்த சாவுத்தண்டனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு எதிரி விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மேனகா விஜயசுந்தர, சசி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதிமன்ற அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியை சேர்ந்த 85 வயதுடைய தேவராசா லில்லி மேரி என்பவரை, 2008ஆம் ஆண்டு மார்கழி மாதம் 29ஆம் திகதி கொலை செய்ததாக, இறந்தவரின் வீட்டில் வசித்து வந்த குணபாலசிங்கம் ஜெறோம் என்பவருக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தொடுக்கப்பட்டது.

தனது வீட்டிலிருந்து திடீரென காணாமற்போயிருந்த மூதாட்டியின் சடலம், 2 மாதங்களின் பின்னர், அவரின் வீட்டின் பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது. எதிரியின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அப்போதைய யாழ்ப்பாண நீதிவான் ஆர்.வசந்தசேனன் முன்னிலையில் புதைகுழியிலிருந்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கழுத்து நெரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் மற்றும் மொட்டையான ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டதனால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு என்பன காரணமாக இறப்பு உடனடியாகவே நிகழ்ந்ததாக உடற்கூற்று அறிக்கையில் கண்டறியப்பட்டது.

இறந்தவர் காணாமல் போயிருந்த காலப்பகுதியில் அவர் வாழ்ந்த அதே வீட்டில் தனது மனைவி, பிள்ளையுடன் வாழ்ந்து வந்த எதிரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, இரண்டு நகைக்கடைகளில் இருந்து உருக்கப்பட்ட நிலையில் சில நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நடத்தப்பட்ட வழக்கு விசாரணையில் அரச தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியத்தை தொடர்ந்து, எதிரியும் சாட்சியம் அளித்தார்.

தனது மனைவியுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் வசித்த வீட்டிலிருந்து தனியே வெளியேறிச் சென்றுவிட்டதாகவும், தொடர்ந்து பொய்யான தகவல் ஒன்றின் அடிப்படையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு மூன்று வாரங்கள் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் எதிரி தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இறந்தவரின் வீட்டுக்கு தனது மனைவி மற்றும் பிள்ளையைத் தேடி தான் சென்றபோது, அங்கு யாரும் இருக்கவில்லை என்றும், இறந்தவரின் கொலைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். இவ்வழக்கில் தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது தனது மனைவி இறந்துவிட்டார் என்று அறிந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையின் முடிவில் தீர்ப்பு வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால், திருப்திகரமான முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, குற்றத்தீர்ப்பு வழங்கி எதிரிக்கு சாவுத்தண்டனை விதித்திருந்தார்.

2017ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பையும் சாவுத்தண்டனையையும் ஆட்சேபித்து எதிரியால் மேன்முறையீடு செய்யப்பட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்ற மேன்முறையீட்டு விசாரணையில், கொலைக்குற்றச்சாட்டுக்கு, எதிரியை குற்றவாளி என தீர்ப்பளிப்பதற்கு போதுமான சாட்சியம் இல்லை என அவரின் சார்பில் வாதிடப்பட்டது. இருதரப்பு வாதங்களும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நீதியரசர்கள் மேனகா விஜயசுந்தர, சசி மகேந்திரன் ஆகியோர் தமது தீர்ப்பில், குற்றச்சாட்டு நியாயமான அளவு சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட்டனர். மேன்முறையீட்டு விசாரணையில் எதிரியின் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி எஸ். பஞ்சாட்சரத்தின் அனுசரணையுடன் முன்னிலையானார். (அ-ஒ,20,26,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விகாரை...

இந்த விகாரை அமைக்கப்படவுள்ள பிரதேசம் இலுப்பைக்குளம் எல்லையில் உள்ளது என்றும் அங்கு 2 ஆயிரத்து 202 தமிழ் குடும்பங்களும், 538 சிங்கள குடும்பங்களும் வசிக்கின்றன எனவும் விகாரை அமைக்கப்படுவதால் இனமுறுகல் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தே விகாரை நிர்மாணப் பணிக்குத் தடைவிதித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இந்தப்பிரதேசத்தில் 4 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பௌத்த சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறி இந்தப்பிரதேசம் தொல்லியல் திணைக்களத்தால் தொல்லியல் பிரதேசமாக அடையாளப்படுத்தப் பட்டிருந்தது.

'விகாரை அமைக்கப்படவுள்ள காணி விகாரைக்குரிய காணியல்ல. அது அரச காணி. அதே நேரத்தில், அப்பகுதியில் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் தங்களுக்குச் சொந்தமான வழிபாட்டுத் தலத்தை அமைக்கவும் முயற்சித்திருந்தார்கள். இந்தப் பிரச்சினை இரு சமூகத்தினருக்கும் இடையே இனவாத மோதலாக மாறாமல் பார்த்துக்கொள்வது எனது தலையாய கடமையாகும். எனவே, பொரலகந்த ரஜமஹா விகாரையின் தலைமைப் பீடாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்து, தற்போது நடைபெற்று வரும் நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக நிறுத்துவது அவசியம் என நான் கருதினேன்' என்று தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.6)

## ஒய்வுபெற்ற...

உள்ளதால் அவர்களை இணைத்துக் கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

'அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்படும். இந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டால் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு தவிர்க்கப்படும். ஆயினும், இவர்கள் அனைவரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னரும் 26 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படும்' என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## இராவணன்...

வகையில் இலங்கையில் சின்னங்கள் காணப்படுகின்றபோது இராணவனைத் தமிழர் என்று குறிப்பிடுவதையிட்டு வெட்கப்படவேண்டும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமைஇடம்பெற்ற இராணவன் மன்னன் தொடர்பாகமுறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராணவன் இந்தியாவுக்கு விமானத்தில் சென்று சீதாவை கடத்தி வந்ததாக குறிப்பிட்டால் பெரும்பாலானோர் நம்புவதில்லை. எமது வரலாற்றில் இன்றும் உயிர்த் துடிப்பாக உள்ள விடயங்கள் வியப்புக்குரியதாக உள்ளன. மன்னராட்சிக் காலத்தில் சிங்களப் பொறியியலாளர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறான நிலையில் இராவணன் விமானத்தில் சென்று சீதாவை கொண்டு வந்ததாக குறிப்பிடுவதை மறுக்கமுடியாது.

மகாவம்சத்தில் இராணவன் சிறந்த தலைவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இராவணனின் கொடியில் சிங்கச் சின்னம் உள்ளது. இந்தியர்கள், இராவணன் மீது இன்றும் அச்சம் கொண்டுள்ளதால் தான் வருடாந்தம் அவரது உருவத்தை எரிக்கிறார்கள். ஆகவே இராணவன் சிங்களத் தலைவனே - என்றார். (அ-ஒ.இ)

## நான் தோற்றால்...

அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் கல்வி நிறுவனங்கள் மீள ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இது தனிப்பட்ட வருமானத்துக்கு எதிரானது அல்ல. மாறாக சமூகத்தின் நன்மையை அடிப்படையாகக் கொண்டது. இன்று எத்தனையோ பெற்றோர் வகுப்பு மூடப்படுவதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இது ஆன்மிகரீதியான விடயமாகவும் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. அறநெறி கல்விக்கு மாத்திரமல்ல, அதனையும் தாண்டி பிள்ளைகளை அடிப்படையாகக் கொண்டது. மேலும் இந்துக்கள் பெரும்பான்மையான வாழும் யாழ். மாவட்டத்தில் அறநெறி செயற்பாட்டுக்கு இது ஓர் அங்கமாக அமைகின்றது.

தற்பொழுது தனியார் கல்வி நிறுவன அமைப்புகளுடன் சந்திப்பு இடம்பெற்று ஒரு 'வட்ஸ்அப்' குழு உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். வெள்ளி மற்றும் ஞாயிறுகளில் நடைமுறைகளை மீறி கல்வி நிறுவனத்தை நடத்துபவர்கள் குறித்து தகவல்கள் பகிரப்படுகின்றன. உடனடியாக எம்மால் சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும் தரவுகளைத் திரட்ட முடிகின்றது. தரவுகள் முழுமையாகத் திரட்டப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கைக்குள் இறங்குவோம்.

தரம் 9 இன் கீழ் கற்கும் மாணவர்களின் கழுத்தைத்தான் பிடிக்காதீர்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளோம். தனிப்பட்ட சிலர் இதற்கு எதிராகக் கதைக்கின்றார்கள். அவர்களும் காலப்போக்கில் யதார்த்தத்தை உணர்ந்துகொள்வார்கள் - என்றார். (அ-ஒ.125)

## '13' உம்...

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு எதிரான அமைப்பு, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக கொழும்பு, தும்முல்லை சம்புத்த ஜயந்த விகாரையில் நேற்றுமுன்தினம் நடத்திய கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நாட்டுக்காக உயிர்களைத் தியாகம் செய்த படையினரை மாத்திரமல்லாது, மக்களை காட்டிக்கொடுக்கும் செயல். தற்போது இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்பட்டு, இராணுவத்தினரைக் குறைத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் உரிமைகள் அழிக்கப்படுகின்றன. புலிகளால் பெற்றுக்கொள்ள முடியாது போன தமிழீழத்தை 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொடுக்க இடமளிக்கமுடியாது - என்றார்.

இறுதிப்போரில் படைகளை வழிநடத்திய தளபதிகளில் ஒருவரான ஜகத் டயஸ்க்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டுகள் உள்ளன என்பதுடன் அவர் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## 25 இலட்சம்...

பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தாலியில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர், கொக்குவிலைச் சேர்ந்த இளைஞனை வெளிநாட்டு விசாவில் இத்தாலிக்கு எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள தனது முகவரைச் சந்திக்குமாறு அவர் இளைஞனுக்கு அறிவுறுத்தியுள்ளார். இதனையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள முகவரை இளைஞர் சந்தித்துள்ளார். 25 இலட்சம் ரூபா பணத்தையும் அவர் பெற்றுக்கொண்டு, இத்தாலியிலிருப்பவர் அனுப்பியதாகத் தெரிவித்து இத்தாலி விசா ஒன்றையும் வழங்கியுள்ளார்.

அதை நம்பிப்பெற்றுக்கொண்ட இளைஞர், கொழும்பிலுள்ள இத்தாலித் தூதரகத்துக்குச் சென்றபோதே அது போலியான விசா என்பது தெரியவந்துள்ளது. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த இளைஞர் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ-ஒ.27)

## புதைகுழியை...

பாகம் விலங்குகளால் நேற்றுமுன்தினம் இழுத்துவரப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸார், யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ. ஆனந்தராஜா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் உட்பட்ட குழுவினர் அந்தப் பகுதிக்குச் சென்றனர். அதற்கு அண்மையிலுள்ள கோம்பயன் மணல் மயானத்துக்குச் சென்றும் பார்வையிட்டனர். அங்கு சிசுக்களின் உடல்கள் புதைக்கப்பட்ட குழி சரிவர மூடப்படாத நிலையில் உடற்பாகங்களின் மேல் நாய் நிற்பதை அவதானித்தனர்.

இதனையடுத்து யாழ். மாநகரசபை ஆணையாளர், மயான விடயத்துக்குப் பொறுப்பான பணியாளர், பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரை எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றுக்கு வாக்கு மூலம் வழங்க வருமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் இரவுடன் இரவாக மேற்படி புதைகுழி மாநகர சபையினரால் மூடப்பட்டுள்ளது. யாழ். மாநகரசபை ஆணையாளர், மயான விடயத்துக்கு பொறுப்பான பணியாளர், பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரிடம் நேற்று வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-ஒ.125)

## வேலைக்கு...

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் காலை 8 மணிமுதல் பி.ப. 1 மணிவரை முன்னெடுக்கவுள்ளன.

கணக்கியல்துறை, காப்புறுதித்துறை, சந்தைப்படுத்தல்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஹோட்டல் துறை, கணினித்துறை பயிற்சிநெறி, தாதியர் பயிற்சிநெறி, ஆடைத்தொழிற்சாலை, பாதுகாப்புச் சேவை, சுப்பர் மார்க்கெட், தனியார் உற்பத்தி நிறுவனங்கள் தொழிற்சந்தையில் கலந்துகொள்ளவுள்ளன.

கடந்த ஆண்டு இடம்பெற்ற தொழிற்சந்தையில் 50 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 200 க்கும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு தொழிற்சந்தை நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் - என்றார். (அ-ஒ.125)

## போதைக்...

செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸுடன் அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு படையின் முதனிலை செயலர் தலைமையிலான குழுவினர், இலங்கை சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்கள் வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்திலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்பவர்களைத் தடுக்கும் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அவுஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்புப் படைப் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவுஸ்திரேலியப் படையின் முதனிலைச் செயலரால் கூறப்பட்டது.

வடமாகாணத்திலிருந்து பாலாலி விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நேரடியாக சேவை நடைபெறுவதாலும் இந்தியா - இலங்கை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட இருப்பதனாலும் சுங்கத் திணைக்களங்களின் செயற்பாடுகளை வலுப்படுத்தவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை, மன்னார் முதலிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்து வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவுள்ளதால் மேலும் சட்டவிரோத எல்லைமீறல்கள் நடைபெற வாய்ப்புகள் உள்ளதால் அது தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும் ஆளுநர் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.26,27)

## அதிபருக்கு...

விட்டு தண்டனை வழங்கப்பட்டமைக்கு ஆசிரியர் ஒருவர் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், அதிபரின் தவறை மூடிமறைக்கும் நோக்கில், மாணவர்களைத் தவறான முறையில் பயன்படுத்தும் அதிபரின் செயற்பாடு தொடர்பாக வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும். பாடசாலையின் 'சி.சி.ரி.வி. தொகுப்புகள் உடனடியாக கண்காணிக்கப்பட்டு, அதிபரால் கூட்டம் கூட்டப்பட்ட மாணவர்களும் ஏனையோரும் தவறாக வழிநடத்தப்பட்ட விடயங்கள் கண்டறியப்படவேண்டும்.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருடன் இணைந்து பொலிஸாரும் நேற்று விசாரணை நடத்தியுள்ள நிலையில் முடிவுகள் கண்டறியப்பட முன்னர் விசாரணைகளைத் திசைதிருப்பும் நோக்கில் மாணவர்களைத் தவறாக வழிநடத்தும் அதிபரின் செயற்பாடு குறித்து விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ.20,27,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகளவு மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்த 12 வயதுச் சிறுமி காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு வழங்கப்பட்ட உளவள சிகிச்சையின்போது, அல்லைப்பிட்டி, வெண்புரவி நகரைச் சேர்ந்த 25 வயதான இளைஞரால், தான் உட்பட 4 சிறுமிகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சிறுமியை சட்ட மருத்துவ அதிகாரி முன்பாக பொலிஸார் நேற்றுமுன்தினம் முற்படுத்தியிருந்தனர். சிறுமியின் வாக்குமூலத்துக்கு அமைவாக சந்தேகநபரான 25 வயது இளைஞர் நேற்றுக் கைதானார்.

(அ-ஒ.125)


**Motor Bike தேவை**

Discover - 100 அல்லது அதனைப் போன்ற Bike தேவை.

தொடர்பு: 077 9599 022

**Group & Personal Class**

Temple Road, Jaffna.

**Grade 6 - O/L வரை (Tamil Medium)**

**Science**

T.P: 076 3432 521

"இலவச கருத்தரங்கின் வளவாளர்"

Mr.N.மகேந்திரன்

(CS 259241)A-1

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனத்தில் கீழ் வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(1) மேற்பார்வையாளர் (2) உதவியாளர் (3) வரவேற்பாளர்

நாளொன்றுக்கு 1200 - 1800 வரை பெற்றுக்கொள்ளலாம்.

தகைமை : O/L,

வயது : 17 - 35 வரை

தங்குமிட வசதி இலவசம்


தொடர்புகளுக்கு:077 052 7513, 076 678 3886

(CS 25909)A-1

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில்
6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.


**நிலப்பரப்பு**

- ✔ நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- ✔ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ✔ நன்னீர் ஊற்று சூழல்
- ✔ ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- ✔ பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு - ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**


## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 11 . 1951 — மறைவு 10 . 08 . 2023

**கிருஷ்ணபிள்ளை கதிர்காமத்தம்பி**

காரைநகர் இலகடியைப் பிறப்பிடமாகவும் நெடுங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை கதிர்காமத்தம்பி கடந்த (10.08.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை சுந்தரம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கனகசபை குணவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராசமலரின் பாசமிகு தம்பியும், புஸ்பவதியின் அன்புக் கணவரும், புஸ்பரஞ்சினி (ஆசிரியர், யா/கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்), புஸ்பநந்தினி, நிசாந்தி (தாதிய உத்தி யோகத்தர் பிரதேச வைத்தியசாலை, காரைநகர்), விஜி (அபிவிருத்தி உத்தியோகத்தர், காரைநகர் பிரதேச செயலகம்), வஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹம்ஷன் (காப்பாளர் இலங்கை போக்குவரத்து சபை, யாழ். சாலை), றஜனிகாந்த், சிவசங்கர் (ஆசிரியர், கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு), அரவிந்தன் (நோர்வே, Software Engineer), சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷாளி, ஆதர்ஷா, சங்கவி, தர்வின், லனிஸ் மற்றும் டினிஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25907) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 07 . 1944 — மறைவு 08 . 08 . 2023

**கந்தசாமி அன்னம்மா**

அல்வாய் கிழக்கு தாமன் தோட்டத்தை பிறப்பிடமாகவும் கப்பூது மற்றும் அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அன்னம்மா கடந்த 08.08.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை லக்ஷிமி தம்பதியரின் மருமகளும், கந்தசாமி (தோரை) அவர்களின் அன்பு மனைவியும், சிறிதரன் (சிறி - ஜேர்மனி), ராஜேஸ்வரி (ரதி - சுவிஸ்), மங்களேஸ்வரி (றஞ்சி - ஜேர்மனி), சாரதா (பிரான்ஸ்), சிவகுமார் (சிவா - பெல்ஜியம்), வளர்மதி (சோபா - சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (கிளி), சிவானந்தம் (சிவா), சிவநேசன் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தரூபி, மோகன், குமார், விக்ரர், ஜெயா, காலஞ்சென்ற பற்குணநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லவன், சிரன், ஆதுசியா, ஸ்ருதி, பிரியங்கா, சிவநேசன், சாருஜா, ஸ்ருதி, அஞ்சலி, சயனன், நித்தீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் அச்சுவேலி தோப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25907) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org